மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# பத்துப்பாட்டில் அறியலாகும் அரசியல் அறம்

இரா. நந்தகுமார்
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை

நாட்டையும் நாட்டில் வாழும் குடிமக்களையும் காத்து வந்தவன் காவலன் எனப்பெயர் பெற்றான். அவன் வாழ்ந்த மனை பாதுகாவல் மிக்கதாக இருந்தது. அதனால் அதனை அரண்மனை என்று அழைத்தனர். சிலப்பதிகாரம் அரண்மனையைக் "கோவில்" என்றே குறிப்பிடுகிறது. கடவுளின் இருப்பிடத்திற்கும் கோவில் என்றே பெயர். மன்னனைக் கடவுளாக மதித்தது சங்க காலச் சமுதாயம். மன்னனும், புலவர்களும், புரோகிதர்களும் கூறும் அறிவுரைகளைக் கேட்டு அறவழியில் அரசாட்சி செய்தான். அவ்வழியில் பண்டைய இலக்கியமான பத்துப்பாட்டில் எத்தகைய அரசியல் அறம் பின்னபற்றப்பட்டது என்பதை இக்கட்டுரை ஆய்ந்து கூற முற்படுகிறது.

**அரசன் செயல்கள்**

வைகறையில் அரண்மனையுள் முரசு ஒலிக்கும். அது "பள்ளியெழுச்சி முரசம்" எனப்படும். அப்போது சூதர் நின்று அரசனை வாழ்த்துவர். மாகதர் என்பவர் அரசன் புகழைச் சொல்லுவர். வைதாளிகர் என்பவர் இசைக்கருவிகளை இயக்குவர். நாழிகைக் கணக்கர் நேரத்தை அறிவிப்பர். இதனை,

"சூதர் வாழ்ந்த, மாகதர் நுவல,
வேதாளிகரொடு நாழிகை இசைப்ப
பொறி மயிர் வாரணம் வைகறை இயம்ப"

என்ற அடிகளால் அறியலாம்.

அரசனுடைய மெய்க்காப்பாளர் "பெருமூதாளா" எனப்பட்டனர். அவர்கள் சட்டை அணிந்திருந்தனர். சிறந்த ஒழுக்கமுடையவர். அரசனுக்கு உதவி செய்யப் பணிப்பெண்டிர் இருந்தனர். அவர்கள் சிறந்த அழகிகளாகவும் இருந்தனர். நிறைந்த அணிகலன்களை அணிந்து தம்பாட்டாலும் சொல்லாலும் கூத்தாலும் அரசனை மகிழ்விப்பவர். இதனை,

"மழைஎன மருளும் மகழ்செய் மாடத்து,
இழை அணி வனப்பின் இன்நகை மகளிர்
போக்குஇல் பொலங்கலம் நிறைய"

என்ற அடிகளில் அறியலாம். மன்னனுக்கு, பொற்கிண்ணங்களில் மதுவை வார்த்துத் தந்தனர் பணிப்பெண்கள் என்பதையும் அறிய முடிகிறது.

பாண்டியன் நெடுஞ்செழியன் காலையில் எழுந்து நீராடித் தன் வழிபடு தெய்வத்தை வணங்கினான். அப்பொழுது அவனுடைய முகத்தில் களை காணப்பட்டது. அவன் தன் உடம்பில் சந்தனத்தைப் பூசிக் கொண்டான். அவனது மார்பில் முத்துமாலையும் அன்றலர்ந்த பூமாலையும் விளங்கின. அவனது தோளில் வீரவளை இருந்தது. கைவிரல்களில் மோதிரங்கள் இருந்தன. தன் இடையில் கஞ்சியிட்டுச் சலவை செய்த ஆடையை உடுத்தியிருந்தான். உடைக்கு மேல் சில அணிகள் பொலிவு பெற்று விளங்கின. அவன் காலில் வீரக்கழல் அணிசெய்தது. இதனை,

"திண்காழ் ஆரம் நீவி, கதிர்விடும்
ஒண்காழ் ஆரம் கனவஇய மார்பின்
வரிக்கடைப் பிரசம் மூசுவன மொய்ப்ப,
எருத்தம் தாழ்ந்த விரவுப் பூந் தெரியல்
பொலம் செயப் பொலிந்த நலம் பெறு விளக்கம்
வலி கெழு தடக்கைத் தொழயொடு சுடர்வர
சோறு அமைவு உற்ற நீருடைக் கலிங்கம்
உடை அணி பொலியக் குறைவு இன்று கவைஇ"

என்று மதுரைக்கஞ்சி வருணிக்கின்றது.

## ஐம்பெருங்குழு

அரசனுக்கு ஆட்சியில் உதவி புரியும் குழுக்களில் சிறப்புடையது ஐம்பெருங்குழு என்பதாகும். அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதுவர், சாரணர் என்பவரே ஐம்பெருங்குழுவினர் என்று சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறியுள்ளார். மாசனம், புரோகிதர், மருத்துவர், கணியர், அமைச்சர் என்பவர் ஐம்பெருங்குழுவினர் என்று சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் கூறியுள்ளார். இவருள் மாசனம் என்பவர் குடிமக்களின் நலன்களையும் தேவைகளையும் அரசனிடம் எடுத்துக்கூறிப் பாதுகாக்கப் பயன்பட்டார்கள். நாட்டில் சமயம் தொடர்பான செயல்களைப் புரோகிதர் கவனித்தனர். மருத்துவர் நாட்டுச் சுகாதாரத்தைக் கவனித்து வந்தனர். கணியர் நாட்டில் நடைபெற வேண்டிய நல்ல செயல்களைத் தொடங்குவதற்குரிய நாளையும் நேரத்தையும் குறிக்கப் பயன்பட்டனர். நாட்டின் வருவாயையும், அரசாங்கச் செலவையும் நீதி முறையையும் அமைச்சர் கவனித்தனர்.

**எண்பேராயம்**

கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளி மறவர் என்பவர் எண்பேராயத்தாராவர். இவருள் 1 கரணத்தியலவர் என்பவர் அரசாங்கப் பெருங்கணக்கர். 2. கருமவிதிகள் என்பது அரசாங்க வேலைகளை நடத்தும் தலைவர்கள் 3. கனகச் சுற்றம் என்பது அரசாங்கப் பொருட்காப்பு அதிகாரிகள் ஆவர். 4. கடைகாப்பாளர் என்பது நாடு காக்கும் அதிகாரிகள். 5 நகரமாந்தர் என்பது நாட்டில் இருந்த பல நகரங்களின் பிரதிநிதிகள் 6. படைத்தலைவர் என்பவர் காலாட்படைத் தலைவர், 7.யானைவீரர் என்பது யானைப்படைத்தலைவர் 8. இவுளிமறவர் என்பது குதிரைப்படைத் தலைவர் ஆவர். மன்னன் ஐம்பெருங்குழுவினரையும் எண்யேராயத்தையும் கலந்தே ஆட்சி புரிந்தான்.

**நாளோலக்கம்**

அரசனது அரசியல் அலுவல்களைக் கவனிக்கும் இடத்திற்குச் நாளோலக்க மண்டபம் என்று பெயர். அங்கு அவனுக்கு உதவியாக ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும், மண்டிலமாக்களும் கூடியிருப்பர். அங்குத் தம் புலமையைக் கூட்டிப் பரிசில் பெற வந்த புலவர், பாணர், கூத்தர் முதலியோர்க்குப் பரிசில் வழங்குவான். பின்பு தன் அமைச்சர்களுடன் அரசாங்கத்தின் நடைமுறைகளைக் கவனிப்பான். இதனை மதுரைக் காஞ்சி,

"வரையாவாயில் செறா அது இருந்து
பாணர் வருக் புாட்டியர் வருக்
யானர்ப் புலவரொடு வயிரியர் வருக் என
இருங்கினை புரக்கும் இரவலர்க்கு எல்லாம்
கொடுஞ்சி நேடுந்தேர் களிற்நொடும் வீசி"

என்ற அடிகள் மூலம் உணர்த்துகின்றது.

**அறிவுரை**

ஆசான் என்பவன் புரோகிதன் என்று அழைக்கப்பட்டான். அவன் சிறந்த நூல்களிலுள்ள அறவுரைகளையும் அறிவுரைகளையும் எடுத்துக் கூறி மன்னனை நல்வழிப்படுத்துபவன். நாட்டில் புகழ்பெற்ற புலவர்களும் அரசனுக்கு அறிவுரைகள் கூறினர். மாங்குடி மருதனார் என்பவர் அறக்கனை கேள்வி செய்து நலம் பெறும்படி அறிவுரை கூறியதை மதுரைக் காஞ்சி

"பொய்யா நல் இசை நிறுத்த புனை தார்ப்
பெரும் பெயர் மாறன் தலைவனாக
கடந்து அடு வாய்வாள் அளம்பல கோசர்
இயல் நெறி மரபின் நின்வாய்மொழி கேட்ப
பொலம்பூண் ஐவர் உட்படப் புகழ்ந்த

மறம் மிகு சிறப்பின் குறுநில மன்னர்

அவரும், பிறரும், துவன்றி

பொற்பு விளங்க புகழ் அவைநிற்புகழ்ந்து ஏத்த"

என்ற அடிகளால் அறியலாம்.

**அரசு**

சங்க காலத்தில் ஒவ்வொர் ஊரிலும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியோர் இருந்து ஊராட்சியைக் கவனித்தனர். நாட்டின் தலைநகரங்களில் பெரிய நீதிமன்றம் இருந்தது. அதனை "அறக்களம்" என்றும் அறங்கூறு அவையம் என்றும் அழைத்தனர். சில வழக்குகளை மன்னனே விசாரித்து நீதி வழங்குவதும் உண்டு.

இளைஞனான கரிகாலன் முதியவனைப் போல வேடம் பூண்டு நீதி வழங்கினான் என்பதை பொருநாராற்றுப்டை,

"இளையோர் வண்டல் அயரவும், முதியோர்

அவைபுகு பொழுதில் தம்பகை முரண் சொலவும்"

என்று அடிகள் மூலம் உணர்த்துக்கின்றது.

காஞ்சியை ஆண்ட இளநிதிரையன் தன் மந்திரச் சுற்றத்தோடே இருந்து முறை வேண்டியவர்க்கு முறையும், மக்கள் குறைகளை விசாரித்து வேண்டியன வேண்டியவர்க்கு செயதான் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. இதனை

"முறை வேண்டு நர்க்கும், குறை வேண்டுகநர்க்கும்

வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி"

என்ற அடிகளால் அறியலாம்.

**நல்லாட்சி**

மதுரையில் இருந்த அறங்கூறு அவையத்தார் அச்சம், துன்பம், அவா ஆகியவற்றை நீக்கியவர். ஒருசாரரிடம் சினமும் மற்றொரு சாராரிடம் மகிழ்வும் காட்டாதவர். தம்மைத் துலாக்கோலைப் போல நடுவு நிலையில் நிறுத்திக் கொண்டவர். உயர்ந்த கொள்கை உடையவர். இதனை மதுரைக் காஞ்சியில்

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி,

செற்றமும் உவகையும் செய்யாது காத்து,

நெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகி

சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்"

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

திரையன் ஆட்சியில் தொண்டைநாட்டில் வழிப்போக்கரைக் கொல்லும் ஆறலைக் கள்வர், இடி இடிக்காது, பாம்புகளும் கொல்லாது, காட்டில் வாழும் புலியும் துன்பம் செய்யாது. ஆதலால் நீங்கள் நினைத்த இடத்தில் இளைப்பாறிக் கவலையின்றிச் செல்லலாம் என்று பரிசில் பெற்ற பாணன் வறிய பாணனுக்குக் கூறுகின்றான். இதனை

"அத்தம் செல்வோர் அலறத் தாக்கி
கைப்பொருள் வௌவும் களவு ஏர் வாழ்க்கைக்
கொடியோர் இன்று, அவன் கடியுடை வியன்புலம்
உருமும் உரறாது அரவும் தப்பார்
காட்டு மாவும் உறுகண் செய்யர்
வேட்டு ஆங்கு, அசைவுழி அசைஇ, நசைவுழித்தங்கி

சென்மோ, இரவல் சிறக்க நின் உள்ளம்" என்ற அடிகளால் அறியலாம். இதில் திரையனது அறம் மலிந்த ஆட்சி புலப்படுகின்றது.

**நுண்ணறிவு உடையவர்**

திரையன் அறத்திற்கு மாறானவற்றை நீக்குபவன். அறம் புரிகின்ற செங்கோலன். நீதி வேண்டி வருவோரையும் தம்குறைகளைப் போக்கிக்கொள்ள விரும்பிவருவோரையும் வரவேற்பான். இன்சொல் கூறுவான். அவர்கள் வேண்டுவனவற்றை வேண்டியவாறே கொடுப்பான். நடுவுநிலையில் இருந்து உண்மையைக் கண்டறியும் குற்றமற்ற நுண்ணறிவு உடையவன். ஏன்பதை, பெரும்பாணற்றுப்படை.

"இடைத் தெரிந்து உணரும் இருள் தீர் காட்சி
கொடைக்கடன் இறுத்த கூம்பா உள்ளத்து
உரும்பு இல் சுற்றமோடு இருந்தோற் குறுகி"

என்று கூறுகின்றது.

பாண்டிநாட்டில் மழைவளம் மிக்கிருந்தது. ஆறுகள் நீர்ப்பெருக்கெடுத்து ஓடின. உயிர்கள் பசியும் பிணியும் இன்றி உடல் வலிமைபெற்று எழிலுடன் விளங்கின. அவர் ஆட்சியில் வாழ்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு ஒரு குறைவையும் காணாதவர்கள் பொய், களவு முதலிய தீயவற்றை அறியாதவர்களாய் வாழ்ந்தார்கள். இவற்றுக்கொல்லாம் காரணமாய் அமைந்த பாண்டிய மன்னர் உயர்ந்தோர் ஆவர். எனக் கருதினர். இதனை

"பொய் அறியா, வாய் மொழியால்
புகழ் நிறைந்த, நல்மாந்தரொடு
நல் ஊழி அடிப்படர,
பகலீ வெள்ளம் மீக்கூற
உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக"

என்ற அடிகளால் அறிய முடிகிறது.

**முடிவுரை**

சங்க காலத்தில் அரசன் வாழும் அரண்மனையைக் கோயில் என்றே அழைத்தனர். அரசனுக்கு உதவியாளர்கள் பலர் இருந்தனர். அரசனுக்கு ஐம்பெருங்குழுவும்

எண்பேராயமும் அரசாட்சியில் உதவிபுரியும் சிறந்தக் குழுக்கள் ஆகும். அரசனது அரசியல் அலுவல்களைக் கவனிக்கும் இடத்திற்கு "நாளோலக்க மண்டபம்" என்று பெயர். அரசனுக்கு அறிவுரை கூறி அவனை நல்வழிப்படுத்த ஆசான் என்ற புரோகிதர் இருந்தார். நாட்டின் தலைநகரங்களில் இருந்த நீதிமன்றத்திற்கு அறங்கூறு அவையம் என்று பெயர் வழங்கப்பட்டது. நல்ல முறையில் மக்களை அரசர் பாதுகாத்ததால் மக்கள் மகிழ்ச்சியுடன் வளமுடன் நலமுடன் வாழ்ந்தனர் என்பதை அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. மதுரைக் காஞ்சி, அடி 670-672
2. மேலது, அடி 779-781
3. மேலது, அடி 715-722
4. மேலது, அடி 748- 752
5. மேலது, அடி 771-778
6. பொருநராற்றுப்படை, அடி 187-188
7. பெரும்பாணாற்றுப்படை, அடி 443-444
8. மதுரைக்காஞ்சி, அடி 489-492
9. பெரும்பாணாற்றுப்படை, அடி 39-45
10. மேலது, அடி 445-447
11. மதுரைக்காஞ்சி, அடி 19-23